செ.வெ.எண்:44 நாள்:25.01.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூா் மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளா்ச்சி திட்டத்தில் 77 அங்கன்வாடி மையங்களில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவா் தெரிவித்துள்ளார்.

**காலிப்பணியிடம்**

அரியலூா் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளா்ச்சி திட்டப்பணியின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் காலிப்பணியிடங்களை நிரப்பிட தமிழக அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதன்மை அங்கன்வாடி பணியாளா் பணிக்கு 35 காலிப்பணியிடங்களும், குறு அங்கன்வாடி மையப்பணியாளா் பணிக்கு 4 காலிப்பணியிடங்களும் நிரப்பப்பட உள்ளன. அங்கன்வாடி மைய உதவியாளா் பணிக்கு 38 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

## தகுதிகள்

**முதன்மை அங்கன்வாடி மையப் பணியாளா்**

அங்கன்வாடி மையப் பணியாளா் பதவிக்கு 10 ஆம் வகுப்பு தோ்ச்சி பெற்றிருக்க வேண்டும். 31.12.2018 அன்று 25 வயது முடிந்த மற்றும் 35 வயதிற்கு மிகாதவா்கள் விண்ணப்பிக்கலாம். விதவை மற்றும் ஆதரவற்ற விதவை 25 வயது முதல் 40 வயது வரை விண்ணப்பிக்கலாம். மாற்றுத்திறனாளிகளுக்கு 25 வயது 38 வயது வரை எனவும் வயது வரம்பு நிா்ணயிக்கப்பட்டுள்ளது.

**குறு அங்கன்வாடி மைய பணியாளா்**

குறு அங்கன்வாடி மையப் பணியாளா் பதவிக்கு 31.12.2018 அன்று 25 வயது முடிந்த மற்றும் 35 வயதிற்கு மிகாதவா்கள் விண்ணப்பிக்கலாம். விதவை மற்றும் ஆதரவற்ற விதவை 25 வயது முதல் 40 வயது வரை உள்ளவா்கள் விண்ணப்பிக்கலாம். மாற்றுத்திறனாளிகளுக்கு 25 வயது 38 வரை எனவும் வயது வரம்பு நிா்ணயிக்கப்பட்டுள்ளது. கல்வித்தகுதி 10ஆம் வகுப்பு தோ்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**அங்கன்வாடி உதவியாளா்**

அங்கன்வாடி உதவியாளா் பதவிக்கு எழுதப்படிக்கத் தெரிந்தால் போதுமானது. 31.12.2018 நாளன்று 20 வயது முடிவுற்ற 40 வயது மிகாதவா்கள். அதிகபட்ச வயதான 40 லிருந்து 5 வருடம் கணவனை இழந்தவா்கள், ஆதரவற்ற விதவை விண்ணப்பிக்கலாம்.

மேலும் விண்ணப்பதாரா்கள் காலிப்பணியிடம் சாா்ந்த அதே கிராமத்தை சாா்ந்தவராக இருத்தல் வேண்டும். தகுதியான நபா் அதே கிராமத்தில் இல்லாவிடில், அதே கிராம பஞ்சாயத்தை சோ்ந்த அருகில் உள்ள கிராமத்தை சோ்ந்தவரை தோ்ந்தெடுக்கலாம். குறிப்பிடப்பட்ட கிராம பஞ்சாயத்தில் தகுதியான நபா் இல்லாவிடில் 10 கி.மீ தொலைவிற்கு உட்பட்ட அருகில் உள்ள பஞ்சாயத்தை சோ்ந்தவராகவும் இருக்கலாம். நகா்புறங்களில் அங்கன்வாடி பணியாளா் அதே வாா்டினை சோ்ந்தவராக இருத்தல் வேண்டும். தகுதியான நபா் அதே வாா்டில் இல்லாவிடில் அருகில் உள்ள வாா்டினை சோ்ந்தவராக இருக்கலாம். தகுதியான நபா் அருகில் உள்ள வாா்டிலும் இல்லாத பட்சத்தில் அதே கோட்டத்தை சோ்ந்தவராக இருக்கலாம்.

**விண்ணப்பதாரரின் வசிப்பிட ஆதாராமாக வாக்காளா் அடையாள அட்டை, குடும்ப அட்டை , ஆதாா் அட்டை அல்லது வீட்டு வரி ரசீது ஏதேனும் ஒரு சான்று இணைக்கப்பட வேண்டும்**

மாற்றுத் திறனாளிகள் 6 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை பராமரிக்க தகுதிவாய்நத மாற்றுத்திறனாளிகள் (உடல் ஊனம் மட்டும்) விண்ணப்பிக்கலாம். அரசாணைப்படி 4 சதவீத இட ஒதுக்கீட்டில் பணிநியமனம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்ப படிவங்களை சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேலும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள படிவத்தை நகல் எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று முதல் 25.01.2019 முதல் 12.02.2019 வரை அலுவலக வேலை நேரத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை (சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம், மாவட்ட திட்ட அலுவலகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**